**தலைப்பு 241 – பொது முயற்சிகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 3.1.2, 3.2.2 ஆம் அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்ட வருமானக் குறியிடுகளுக்குரிய 03 வருமானக் கணக்குகள் என்பன பொது முயற்சிகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 241 - பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 19 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொது முயற்சிகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமான தன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள் ள அறிக்கைகளின் பந்தி தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் | 1. பெறுகைச் செயற்பாடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.3.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 2.<br>3. | மிகை நிதிஏற்பாடு<br>ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை | 2.4(ஆ)<br>2.4(அ) |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முமைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | 1.<br>2. | வருமானக் கணக்குகளில் குறைபாடு<br>அரசாங்க உத்தியோகத்தர்களுக் கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.5<br>2.6 |
| நிதிப்பிரமாணம் 128(2) வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை<br>--------------------------------- | | | | |
| 128(2)(அ) | தவருமானக் குறியீட்டுக்குரிய வருமான மதிப்பீடுகளில் முற்றாகவும் இயன்றளவு | | எதிர்பார்த்த வருமானத்தை சேகரிப்பதற்கு | 2.5 |

செம்மையாகவும் முடியாதிருந்தமை
தயாரிக்கப்படுகின்றன என்பதையும்

## 2. போதியளவான மற்றும்முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திணைக்களத்தின் பிரதான பணிப்பொறுப்புக்கள்

(அ) பொது முயற்சிகளுக்கான கொள்கைகளைத் தயாரித்தல்.

(ஆ) வணிக கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) பொது முயற்சிகளில் நல்லாளுகைகளை அமுல்படுத்துவதற்குரிய புதிய சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டிகள் விநியோகித்தல்.

(ஈ) அமைச்சரவையின் முன்மொழிவுகளுக்கு கவனம் செலுத்துதல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

(உ) அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான தொழில் முயற்சிகள் மற்றும் அதற்குரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல்.

(ஊ) பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் கூட்டத்திற்காக உதவுதல்.

### 2.2 செயலாற்றல்

#### 2.2.1 திட்டமிடல்

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) உரிய ஆண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போது சேவையில் இருக்கின்ற பதவியணியினர் தொடர்பான விபரம்

(ii) வருமானத் திணைக்களத்தால் பாதீட்டு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வருமானத் தலைப்பிற்காகவும் வருமானத்தை சேகரிக்கும் செயல்நடவடிக்கைத் திட்டம்.

(iii) வருடாந்த செயற்பாடுகளுக்காக கட்டுநிதி தேவைக்கான திட்டம்

(iv) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம்

(ஆ) பொது முயற்சிகள் திணைக்களத்தால் பொது முயற்சிகள் மூலம் குறித்த கால அட்டவணையில் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான 55 வணிக தொழில் முயற்சிகளின் ஆண்டறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும் போது 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்களுக்குரியதாக முறையே 21, 32 மற்றும் 41 நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 03 நிறுவனங்கள் 05 ஆண்டுகளுக்கும், 04 நிறுவனங்கள் 03 வருடங்களுக்கும் மற்றும் 13 நிறுவனங்கள் 03 வருடங்களுக்கும் தொடர்ச்சியாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும், நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு தேவையான இலக்குகள், அடிப்படைத் தரவுகள், இலக்கை அடையக்கூடிய கட்டங்கள் போன்ற செயன்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்குத் தேவையான குறிகாட்டிகளையும் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டின் போது பொது முயற்சிகள் திணைக்களத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திற்குச் சொந்தமான 55 வணிக தொழில் முயற்சிகள் சொத்துக்களில் முதலீட்டு நலன் விகிதம் 0.64 சதவீதமான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமையின் காரணமாக பொது முயற்சிகளின் செயலாற்றல் மட்டம் முழுமையான வீச்சில் காணப்படாதிருந்தமை தெளிவாகின்றது. அதற்காக தெளிவான பொறுப்புத் திட்டமொன்று காணப்படாமை, கொள்கை மற்றும் சட்டக் கோவைகள் காணப்படாமை மற்றும் நலிவான நிறுவன மேற்பார்வை காணப்படுகின்றமை போன்ற பிரதானமான காரணங்கள் ஏற்பட்டிருந்ததாக திணைக்களம் இனங்கண்டிருந்தது. எனினும் சில நிறுவனங்கள் தொடர்பாக நீண்ட காலமாகக் காணப்படுகின்ற இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு திணைக்களம் போதியளவான பங்களிப்பினை வழங்கியிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான வணிக தொழில் முயற்சிகளின் செயலாற்றலுக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் சிபாரிசின் கீழ் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை 2016 ஆம் ஆண்டில் ரூபா 9.49 மில்லியன் தொகையான வரிக்கு முந்திய இலாபம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 840 மில்லியன் நட்டம் வரை வீழ்ச்சியடைந்து சென்றிருந்தமை அறிக்கையிடப்பட்டிருந்தது. அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தால் ஏற்றுமதி செய்யப்பட்ட கூடுதலான பால் அளவைப் பெற்றுத்தரும் பசுக்களிலிருந்து பெறப்பட்ட கன்றுகளை பயன்படுத்தி புதிய பால் பண்ணையை மேம்படுத்துமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பசு மாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பசு மாடுகளிலிருந்து எதிர்பார்த்த பால் அளவு கிடைக்கப்பெறாமை, பாற் பசுக்கள் இறக்கும் அபாயம் காணப்பட்டமை மற்றும் கருக்கட்டல் செயற்பாடுகள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்காமை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறுகை செயற்பாடுகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

திணைக்களத்தால் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 3.55 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2.49 மில்லியன் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3.1 பெறுகைத் திட்டமிடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின்போது பெறுகை செயற்பாடுகளின் மூலம் வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 0.55 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக பிரதான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) வழிகாட்டியின் பிரகாரம் விரிவான பெறுகைகள் திட்டமொன்று மற்றும் 4.2.2 இனதும் 4.2.3 இனதும் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு, பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 48.14 | 41.04 | 7.10 | 14.75 |
| | மூலதனம் | 6.85 | 6.42 | 0.43 | 6.33 |
| | **மொத்தம்** | **54.99** | **47.46** | **7.53** | **13.70** |
| 2014 | மீண்டெழுபவை | 57.55 | 56.25 | 1.30 | 2.25 |
| | மூலதனம் | 11,350.37 | 11,347.77 | 2.60 | 0.02 |
| | **மொத்தம்** | **11,407.92** | **11,404.02** | **3.90** | **0.03** |
| 2015 | மீண்டெழுபவை | 64.61 | 62.75 | 1.86 | 2.88 |
| | மூலதனம் | 94,405.40 | 89,390.93 | 5,014.47 | 5.31 |
| | **மொத்தம்** | **94,470.01** | **89,453.68** | **5,016.33** | **5.31** |
| 2016 | மீண்டெழுபவை | 72.05 | 70.38 | 1.67 | 2.31 |
| | மூலதனம் | 19,425.26 | 19,424.31 | 0.95 | 0.01 |
| | **மொத்தம்** | **19,497.31** | **19,494.69** | **2.62** | **0.01** |
| 2017 | மீண்டெழுபவை | 3,938.84 | 3,934.57 | 4.27 | 0.10 |
| | மூலதனம் | 13,478.55 | 13,476.44 | 2.11 | 0.01 |
| | **மொத்தம்** | **17,417.39** | **17,411.01** | **6.38** | **0.04** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை

01 செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 0.5 மில்லியன் தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாட்டிலிருந்து எதுவும் பயன்படுத்தப்படாமல் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை

04 செலவின விடயங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5.7 மில்லியன் மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 2.53 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 38 சதவீதம் முதல் 66 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.5 மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களத்தால் 2017 ஆம் ஆண்டிற்காக 03 வருமானக் குறியீடுகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 49,100 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுமொத்தமாக 98,675 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 200.97 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சமவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 20.02.03.00 | 44,000 | 50,447 | 6,447 | 14.65 |
| 20.02.04.00 | 5,100 | 3,551 | (1,544) | (30.37) |
| 20.06.01.00 | - | 44,677 | 44,677 | - |

**2.5.1 20.02.03.00 என்ற வருமானக் குறியீடு - இலாபம்**

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**ஆரம்ப வருமானத்தை மதிப்பீடு செய்தல்**

--------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக ரூபா 68,000 மில்லியன் தொகையான ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 44,000 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் சேகரிக்கப்பட்ட மொத்தத் தேறிய வருமானம் ரூபா 50,447 மில்லியனாகக் காணப்பட்டது. ஆரம்ப வருமான மதிப்பீட்டையும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டையும் ஒப்பீடு செய்த போது ஆரம்ப மதிப்பீட்டிற்கு ஒப்பாக ரூபா 24,000 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு அதாவது 35 சதவீத குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் திருத்தப்பட்ட மதிப்பீட்டு வருமானத்தை விஞ்சி உள்ளபடியான வருமானம் ரூபா 6,447 மில்லியனாகக் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட மொத்தத் தேறிய வருமானத்தை ஒப்பீடு செய்த போது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 41,891 மில்லியன் அதாவது 45 சதவீத வீழ்ச்சியொன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 210 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்ட 03 நிறுவனங்களில் 2017 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எந்த பங்களிப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையே இலங்கை மாநாட்டு பணியகம், கடந்த ஆண்டுகளின் போதும் மதிப்பீட்டு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் இதுவரை அதன் மூலம் அரசாங்கத்தின் எந்த வருமானத்திற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபம் வருமானத்திற்கு முறையே ரூபா 12,026 மில்லியன், ரூபா 8,000 மில்லியன், ரூபா 175 மில்லியன் பங்களிப்பை வழங்கிய தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய இரத்தினக்கல், ஆபரணங்கள் அதிகாரசபை 2017 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த பங்களிப்பு முறையே ரூபா 3,865 மில்லியன், ரூபா 5,000 மில்லியன் மற்றும் ரூபா 100 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு அந்த 03 நிறுவனங்களுக்குரிய வருமானத்தின் வீழ்ச்சி 30 சதவீதத்தையும் விஞ்சியிருந்தது.

(இ) அரசாங்க வருமானத்திற்கு கூடுதலான பங்களிப்பை வழங்குகின்ற வங்கித் துறையின் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 25,140 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 20,890 மில்லியன் ஆனமையால் அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட ரூபா 4,250 மில்லியன் குறைவாகும். 2016 ஆம் ஆண்டில் வங்கித் துறையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 38,124 மில்லியன் தொகையை ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டில் ரூபா 17,324 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி என்ற நிறுவனங்களின் 2017 இன்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அதன் வரிக்கு முன்னைய இலாபத்தையும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2017 ஆம் ஆண்டில் உயர்வடைந்து சென்றமை அவதானிக்கப்பட்டது. எனினும், பாசல் iii கூட்டிணைவின் பிரகாரம் வங்கியினால் மூலதனத் தேவையினை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் இதற்காக தாக்கமளித்ததாக பொது முயற்சிகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

**2.5.2 20.02.04.00 ஆம் வருமானக் குறியீடு - இலாபப் பங்கு**

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**ஆரம்ப வருமானத்தை மதிப்பீடு செய்தல்**

மீளாய்வாண்டிற்காக ரூபா 4,600 மில்லியன் தொகையான ஆரம்ப மதிப்பீடு ரூபா 5,100 மில்லியனாக அதிகரிக்கப்பட்டு திருத்தஞ் செய்யப்பட்டிருந்ததுடன் சேகரிக்கப்பட்ட தேறிய வருமானம் ரூபா 3,551 மில்லியன் ஆனமையின் காரணமாக அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டை ஒப்பீடு செய்த போது ரூபா 1,549 மில்லியன் அதாவது 30 சதவீதம் குறைவாகும். அவ்வாறே 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 15,822 மில்லியன் சேகரிக்கப்பட்டமையால் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் ரூபா 12,271 மில்லியன் அதாவது 76 சதவீத வீழ்ச்சி காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டில் ரூபா 556.3 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 06 நிறுவனங்களிலிருந்து எந்தவித பங்களிப்பும் மீளாய்வாண்டின் இலாபப்பங்கை வருமானத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. நூற்றுக்கு நூறு சதவீத பங்குரிமையைக் கொண்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான கனிய மணல் கம்பனியின் 2017ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 154 மில்லியன் தொகையான அதன் வரிக்கு முந்திய இலாபம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 473 மில்லியன் வரை 207 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. உரிய கம்பனியின் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமையின் காரணமாக, 2015 - 2017 ஆம் ஆண்டுகளின் பொதுச் சபைக் கூடம் நடாத்தப்படாத நிலைமையில் இலாபப் பங்கைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததாக பொது முயற்சிகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பாசல் III மூலதன தேவையினைப் பூர்த்தி செய்யும் கட்டளையினால் இலங்கை சேமிப்பு வங்கியிலிருந்து இலாபப் பங்கை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 இன் திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறானஇலாபப் பங்கு வருமானத்தை ஒப்பீடு செய்த போது 03

நிறுவனங்களில் வருமானம் அசாதாரணமாக ரூபா 1,523 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் வீழ்ச்சி வீதம் 52 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(இ) பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2016 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கம்பனியினதும் தேயிலைத் தொழிற்சாலையினது வரிக்கு முந்திய இலாபத்தை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது 2016 ஆம் ஆண்டில் உயர்வடைந்து காணப்பட்டதுடன் இந்த இரண்டு நிறுவனங்களினதும் 2016 ஆம் ஆண்டில் வரிக்கு முந்திய இலாபம் முறையே ரூபா 605 மில்லியன் மற்றும் ரூபா 33 மில்லியனாக இருந்தது. 2015, 2016 மற்றும் 2017 போன்ற ஆண்டுகளின் போது வருமான மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அந்த நிறுவனங்கள் கவனத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும், அந்த தொழில்முயற்சிகளில் அரசாங்கத்திற்குச் சொந்தமான பங்கு மூலதன உரிமைத்துவம் நூறு சதவீதமாக இருந்தது.

**2.5.3 20.06.01.00 ஆம் வருமானக் குறியீடு - கையளித்தலால் கிடைத்த பணம்**

---

**வருமானக் குறியீட்டு இலக்கமொன்றை உருவாக்கலும் வருமானத்தைச் சேகரித்தலும்**

---

2017 ஆம் ஆண்டின் ஆரம்ப வருமான மதிப்பீட்டு இலக்கம் 20.06.01.00 என்ற வருமானக் குறியீடு ‘‘கையளித்தலால் கிடைத்த பணம்’’ என்ற விபரங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அதில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 யூலை 20 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015 இல் உள்ளடக்கப்பட்ட பட்டோலை 1 இல் காணப்பட்ட இந்த வருமானக் குறியீட்டு இலக்கத்தில் நியதிச்சட்ட / அதிகார பலமாக 1996 இன் 01 ஆம் இலக்க பொதுத்தொழில் முயற்சிகள் மீளமைப்புச் சட்டம்’’ இல் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2017 திசெம்பர் 20 ஆந் திகதிய திறைசேரி பிரதி செயலாளரின் இலக்கம் 01/2015(x) என்ற அரசிறைக் கொள்கைகள் சுற்றறிக்கையில் இந்த வருமானக் கணக்கின் நியதிச்சட்ட / அதிகார பலம் ‘‘அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் மீள் கட்டமைப்பைச் செய்வதற்காக அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்’’ ஆகவும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் ‘‘பணிப்பாளர் நாயகம் பொது முயற்சிகள் திணைக்களம்’’ எனவும் திருத்தஞ் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலைமை 2017 ஆம் அண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அதிலும் வருமான மதிப்பீட்டுப் பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அதன் பிரகாரம் இந்த முறையில் திருத்தப்பட்டுள்ள இந்த வருமானக் கணக்கில் 2017 ஆம் ஆண்டின் போது அரச தனியார் கூட்டுமுயற்சியாக 2017 யூலை மாதம் 29 ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட அனுசரணை உடன்படிக்கையின் பிரகாரம் அம்பாந்தோட்டை துறைமுகம் வாடகைக்கு வழங்கப்பட்டமையால் கிடைத்த ரூபா 44,677 மில்லியன் வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 24101 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.00 | 3.90 | 2.50 | 2.88 | 18.00 | 14.93 |

### நிலுவைக் கடன் மீதி அறவிடப்படாமை

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளில் கூட்டுத்தொகை இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர்ந்த ரூபா 408,304 ஆக இருந்ததுடன் இந்த நிலுவை மீதி 05 வருடங்களை விட கூடுதலான காலமாக கொண்டுவரப்படுகின்ற போதிலும் அந்த நிலுவைக்கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்கூறப்பட்ட 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 49.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான செலவினம் ரூபா 723,819 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 30 | 26 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 09 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 22 | 19 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 15 | 02 |
| | மொத்தம் | 81 | 69 | 12 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தேவையினை விஞ்சி பதவியணியினரை அங்கீகரித்தல்**

மீளாய்வாண்டின் இறுதி அளவில் 12 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்ட போதிலும், அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியினர் வெற்றிடமாகக் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 12 ஆக இருந்ததுடன் அத் திகதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் 04 எண்ணிக்கை சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களை உள்ளடக்கி இருந்தது.